**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2022**

------------------------------------------------------------------------------------------------

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II, பிரிவு II (சீ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைசசாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் தண்ணீர் தரத்தினை அடையாளமிடல் ஊடாக துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயருடைய 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,840 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் பந்தி 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br><br>ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இலங்கை சனநாயக சோலிச குடியரசின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதி தொடர்பில் ரூபா. 112 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் வித்தியாசத்தை ஆய்வு செய்வதற்கு போதிய சான்றுகள் பெறப்படவில்லை. | 112.00 | நாங்கள் மத்திய வங்கி கூற்றிலிருந்தே கைதவிர்க்கப்பட்ட தொகை எடுக்கப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மாதாந்த சராசரி வீதங்களின் பிரகாரம் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. LKAS 21 இன் பிரகாரம், திசெம்பர் மாத சராசரி வீதம் உலக வங்கி கடன் அனுமதிக்கும் பொது எடுக்கப்பட வேண்டியிருந்தது. | கடன் மதிப்படும் பொது அதே நாணய மாற்று வீதம் பயன்படுத்துவதுடன் ஆண்டின் இறுதியில் வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் கடன் கைதவிர்ப்பின் மீதான வட்டியாக ஏற்பட்ட ஐ.அ.டொலர் 10,232,420 இற்கு சமமான ரூபா 2,796.70 மில்லியனில் ரூபா 179.64 மில்லியன் தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டு இறுதியில் சேவைக் கட்டணமாக கடனளிக்கும் முகவரால் சாட்டுதல் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,915,309.40 இற்கு சமமான ரூபா 539.56 மில்லியன் தொகை. செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் பதியப் | 3,156.62 | இந்த கொள்கை 2018 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியால் நிறுத்தப் பட்டிருந்ததுடன் இது திறைசேரியால் அரசாங்க செலவினமாக இனங்காணப் பட்டமையால் எங்களுடைய திறைசேரி வாக்குப்பண அறிக்கையிலும் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலப் பகுதியின் போது ஏற்பட்ட வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களிற்காக நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்ட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பட்டிருக்கவில்லை. ஆகவே, நடைபெறும் வேலை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,156.62 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2016 ஆம் ஆண்டில் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 110 மில்லியன் தொகையான வட்டிகளிற்காக செய்யப்பட்ட திருத்தம் முன்னைய ஆண்டு சீராக்கலாக சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிலுள்ள கடன் மீதிக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் திரண்ட கடன் மீதி அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 110.00 | நாங்கள் 2023 ஆம் ஆண்டின் போது இந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். | முன்னைய காலப்பகுதி தவறுகளை திருத்தம் செய்யும் போது உரிய முறையில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | கிளிநொச்சி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இருக்கின்ற இரண்டு பூர்த்தியாக்கப்படாத நகர செயற்திட்டங்களின் நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு ரூபா 29 மில்லியன் கூட்டுத் தொகை நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் பூர்த்தியாக்கப்பட்டவையாக கருதப்பட்டிருந்தது. ஆகவே, நடைபெறும் வேலைகளின் பெறுமதி அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 29.00 | இரத்தினபுரி நகர நீர் வழங்கல் திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 23,534,172.95 தொகையாக இருந்ததுடன் இந்த தொகை பூர்த்தியாக்கப்பட்ட பம்பகின்ன உப செயற்திட்ட கிரயமாக முழுமையாக கருதப்படவில்லை. கிளிநொச்சி நகர நீர் வழங்கல் திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 5,474,181.68 தொகையாக இருந்ததுடன் இந்த தொகை முழங்காவில் நகர நீர் வழங்கல் திட்டத்தின் நிலக் கீழ் நீர் வள மற்றும் மேற்பார்வை கிரயமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய நிறுவன கொடுப்பனவுகள் மேற்குறித்த ஒப்பந்தகாரர் நடைபெறும் வேலைகளிற்கு உரித்தாக இருக்காமையால் மேற்குறித்த கணக்கிற்கு எடுக்கப்பட்டன. ஆகவே, கிளிநொச்சி நகர நீர் வழங்கல் திட்டத்தில் 2018 ஆம் ஆண்டில் இது காட்டப்பட்டிருந்தது. | துணை நடவடிக்கைகள் தொடர்பான சகல கிரயங்களும் பிரதான செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| இல | விபரம் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தகாரர் பிடிகாசு | 233.625 | 3 ஆண்டுகளறிகு மேலாக | ஒப்பந்தகாரர் இன்னமும் பிடி காசினை கோரியிருக்கவில்லை. நாங்கள் ஒப்பந்தகாரருக்கு அறிவிப்பதுடன் பிடி காசினை விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்போம். சில ஒப்பந்தங்களிற்கான பிடிகாசு விடுவிக்கப் பட்டிருந்ததுடன் ஏனையவை ஆண்டின் போது விடுவிக்கப்படும். | ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரின் பிடிகாசினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளி நிறுவனங்களில் வைத்திருந்த குறுகியகால வைப்புகள் | 69.245 | 3 ஆண்டுகளிற்கு மேலானது | நாங்கள் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 21,767,852.94 ஆன 2016/2017 காலப்பகுதி வைப்புத் தெகையை தெளிவு படுத்தியிருந்தோம். 3 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் விடப்பட்டிருந்த குறுகிய கால வைப்புகள் உப செயற்திட்ட குறைபாட்டு காலப்பகுதி மேவப்படுமாயின் விடுவிக்கப்படும். | வேலைகள் பூர்த்தியான பின்னர் குறுகிய கால வைப்புக்களை நீக்குவதை உறுதி செய்ய வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலீச குடியரசு நிதிப் பிரமாணம் | | | |
| | (i) பிரிவு 7.7.2 | சபையின் கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் நிலையான சொத்துக்களில் ரூபா 2 மில்லியன் பெறுமதியான எழுபத்தி மூன்று விடயங்கள் சேதமடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2023 மே 31 வரை நிதிப் பிரமாணங்களின் 7.7.2 ஆம் பிரிவு பிரகாரம் மேற்குறித்த சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் 2023 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் அகற்ற வேண்டிய சொத்து அறிக்கையை பூர்த்தியாக்குவதற்கும் அதனை சமர்ப்பிப்பதற்கும் உறுதியளிக்கின்றோம். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் இந்த விடயம் மீது தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) பிரிவு 170(3) | இலங்கை சனநாயக சோசலீச குடியரசு நிதிப் பிரமாணத்தின் 170(3) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 3 ஒப்பந்தகாரரிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 7,493 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் 2022 மே 31 வரையும் நிதிப் பிரமாணங்களின் 170(3) ஆம் பிரிவு பிரகாரம் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை | நாங்கள் 2023 யூன் மாதத்தின போது நீர் வழங்கல் அமைச்சிற்கு ரூபா 4.7 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்களை (LD) அனுப்பியிருந்ததுடன் இந்த தொகை (LD தொகை) 2 செயற்திட்டங்களிற்கானதை கொண்டிருந்தது 3 இல் 2 செயற்திட்டங்கள் மாத்திரமே இன்றுவரை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி நடக்க வேண்டும் |
| | (iii) பிரிவு 245 மற்றும் 257 | கணக்காய்வு மாதிரிச் செவ்வையின் பிரகாரம், 6 கொடுப்பனவு சான்றிதழ்கள் சான்றுபடுத்தாமல் ரூபா 58 மில்லியன் தொகைக்கு சமமான செலுத்தப் பட்டிருந்ததுடன் அனுமதிக்கப்படாமல் 10 கொடுப்பனவு சான்றிதழ்கள் மூலம் ரூபா 14 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. | நாங்கள் காலக்கிரமர்தில் இதனை அனுப்புவோம். | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் கொடுப்பனவு செய்யும் நேரத்தில் கையொப்பமிட வேண்டும்.. |
| (ஆ) | பரிந்துகைளிற்கான வேண்டுகையின் பொது நிபந்தனைகளின் | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் சேவை தொடங்குவதற்கு முன்னர் காப்புறுதி மேவுகை | ஒப்பந்த உடன்படிக்கை திகதி 2016.10.28 ஆக இருந்தது. இதன்படி, | ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| 24.1(02) ஆம் நிபந்தனை | எடுப்பதற்கு பதிலாக கிறீன்விச் பங்குடமையாளரிடமிருந்து ஆலோசனை சேவை தொடங்கிய பின்னரே இது பெறப்பட்டிருந்தது. | ஆலோசனையாளர் சிறிய 2 மாத தாமதங்களுடன் PII வழங்கியிருந்தார். 2017.01.04 இலிருந்து பொது மக்கள் பொறுப்பு காப்புறுதிக்கு ஏற்றதாக இருந்தது. | இணங்கியொழுக வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

முப்பத்தி ஐந்து நகர மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள், புனரமைப்புச் செயற்திட்டங்கள், பொது மக்கள் சுகாதாரம், சுதேச வைத்திய சுகாதரம் மற்றும் பாசாலை சுகாதார செயற்திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்த காலத்தின் போது முறையற்ற திட்டமிடல், பல ஒப்பந்தகாரர்களின் நலிவான செயலாற்றல், சமூக எதிர்ப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சனைகள் பொன்வற்றால் 01 முதல் 08 சந்தர்ப்பங்களில் கால நீடிப்புக்கள் வழங்கியிருந்த பொதும் 60 நாட்கள் முதல் 1,800 நாட்கள் வரையான கருத்திற்கொள்ள வெண்டிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. ஆகவே, முகாமைத்துவமானது மேற்குறிப்பிட்ட இனங்கண்ட விடயங்களை திருத்துவதற்கும் இந்த செயற்திட்டங்கள் மீது நெருக்கமான கண்காணிப்பை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பின் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவது ஆபத்தான நிலையில் இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரே செயற்திட்டத்திற்காக ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதியை விஞ்சியிருந்தும் இரண்டு ஆண்டீகளிற்கு மேலாக ரூபா 113.39 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வைத்திருந்த போதிலும் மூன்று முதல் எட்டு சந்தர்ப்பங்களில் ஏழு நீர் வழங்கல் செயற்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தது. | தியத்தலாவ ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணைமுறி முழுமையாக காசாக்கப்பட்டிருந்தது. ஆகவே, முற்பண அறவீடு நிலுவையிலில்லை. ஏனைய ஒப்பந்தங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் முற்பணம் கழிக்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு, முற்பண உத்தரவாதங்கள் கணக்குப் பிரிவு என்பவற்றில் உள்ளன. | மாவட்ட முகாமையாளரகள் பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற் திட்டத்தை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றங்கள் நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டியதுடன் கால நீடிப்புகள் வழங்குவதற்குப் பதிலாக நலிவான செயலாற்றலைக் கொண்ட ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புதிய ஒப்பந்தங்களை வழங்கும் போது அவர்களுடைய இருக்கின்ற செயலாற்றல் மதிப்பாய்வு செய்யப்படாமல் நலிவான செயலாற்றலுடைய ஒப்பந்தகாரர்களிற்கு ஏற்கனவே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எனவே, இருக்கின்ற ஒப்பந்தங்களில் ஒபபந்தகாரர்கள் நலிவாக செயற்பட்ட போதும் இரண்டு ஒப்பந்தகாரர்களிற்கு ஏழு ஒப்பந்தங்கள் வழங்கப் | இந்த கட்டத்தில், பிரதான குழாயிடல் வேலைகள் மற்றும் மின் எந்தரவியல் வேலைகள் என்பன ஒருவெண்டிவேவ ஒப்பந்தத்தின் கட்டம் ii மற்றும் கட்டம் iii இல் பூர்த்தியாக்கப்பட்டன. நீர் சுத்திகரிப்பு பொறிக்கு உதித்திய நீர்த் தேக்கத்திலிருந்து நீர் இணைக்கப்படுகின்றன. வர்ணம் தீட்டுதல் மற்றும் தொற்று | புதிய ஒப்பந்தங்கள் வங்குவதற்கு முன்னர் இருக்கின்ற ஒப்பந்தகாரர்களின் செயலாற்றல் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருந்ததுடன் வினைத்திறனான செயற்திட்ட நடவடிக்கைகளை பயன்படுத்தாமல் ரூபா 52.57 மில்லியன் முற்பணங்களை வைத்திருக்கின்றனர் என்பதும் அவதானிக்கப்பட்டது. | நீக்கல் வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. வீட்டு இணைப்பு வேலைகள் நிலுவையில் உள்ளன. | |
| (இ) | ஒப்பந்த காலப்பகுதியின் போது 07 மாவட்டங்களில் 24,000 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதில், 2023 திசெம்பர் 31 இல் இரண்டாவது செயற்திட்ட கால நீடிப்பும் காலாவதியாகும் நிலையிலிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் 21,862 மலசல கூடங்கள் அல்லது 91 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | தற்போது வரை 85 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. சில நலனாளிகள் திட்டமிடப்பட்ட சுகாதார இலக்கினை திருத்தயமையால் சுகாதார நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கலை நிறுத்தியிருந்தனர். | தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் அடைய வேண்டிய இலக்கு உருவாக்க வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், கேகாலை, மொனறாகலை மற்றும் கிளிநொச்சியில் ஒவ்வொன்றும் ரூபா 250,000 கிரயத்தில் 84 விசேட தேவை நலனாளி சுகாதார அலகுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கோகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 48 அலகுகள் அல்லது 57 சதவீதம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அமுலாக்கல் கட்டத்தில் உள்ள இலககு அடையப்படாததிற்கான காரணம், சுகாதார அமைச்சு, நலன்புரி அமைச்சு மற்றும் உரிய அதிகாரிகளிற்கு வழங்கப்பட்டது. 36 இயலாதோர் மலசல கூடம் இனங்காணப்பட்டது. | தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் அடைய வேண்டிய இலக்கு உருவாக்க வேண்டியதுடன் பட்டியலிடப்பட்ட வேலைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஆலோசனை சேவைகளிற்கான கொடுப்பனவு ரூபா 961.14 மில்லியனிற்கு சமமான தொகை மீளாய்வாண்டு இறுதியில் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நடாத்தப்பட்ட மாதிரி பௌதீக கணக்காய்வின் பிரகாரம் செயற்திட்ட காலப்பகுதி முழுவதும் நலிவான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை காரணமாக செயற்திட்ட இடைநிறுத்தல்கள், கால நீடிப்புகள், முரண் | ISC ஆலோசனையாளர் தெரிவு செய்வதற்காக தரம் மற்றும் கிரய அடிப்படை முறை பிரயோகிக்கப்பட்டது. | நலிவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவமானது ஆலோசனையாளருடன் பலமான உடன்படிக்கை செய்யப்பட வேணடியதுடன் ஆலோசனையாளரின் நலிவான செயலாற்றலிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைகள் அனுமதித்தல், உத்தியோகபூர்வ விடுதிகளின் மீள் வடிவமைத்தல் போன்றன தொடர்ச்சியாக ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | நலிவான பராமரிப்பு காரணமாக 2023 யூன் 05 உள்ளவாறு இணையதளம் வேலை செய்யாமையால் செயற்திட்டத்திற்கான இணைய தளத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைய முடியவில்லை. | CBO கண்காணிப்பு இணைதளம் WASSIP நிதிகளின் கீழ் விருத்தி செய்யப்பட்டதுடன் சமூதாய நீர்வழங்கல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதி இறுதிவரை செயற்திட்டம் விருத்தி செய்யப்பட்ட சொத்துக்களை கண்காணிக்க வேண்டும். |
| (எ) | 2022 நவம்பர் 26 ஆந் திகதிய 22/1636/611/015 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் திறைசேரியிற்கு எந்தவொரு மேலதிக சுமையை ஏற்படுத்தாமல் சர்வதேச நீர் கருத்தரங்கிற்காக ஒழுங்கமைக்க அமைச்சரவை அனுமதித்திருந்த போதிலும் நிறுவன இயலளவு அபிவிருத்தி கூறின் கீழ் WASSIP செயற்திட்டத்திற்கு கருத்தரங்கிற்காக வழங்கிய உணவகளிற்காக செலவழித்த ரூபா 9.5 மில்லியன் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், செயற்திட்டம் மதிய உணவு வழங்குவதற்கு ரூபா 4.4 மில்லியன் பெறுமதியான (ஐ.அ.டொலர் 12,000) 100 மதிய உணவு வழங்குவதற்கு உலக வங்கியிடமிருந்து அனுமதி பெற்றிருந்த பொதிலும் 1,350 மதிய உணவிற்காக ரூபா 9.5 மில்லியன் செலவழித்திருந்தது. இறுதியில் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்த போதும் இந்த தொகை பொதுத் திறைசேரிக்கு சுமத்தப்பட்டிருந்தது. இறுதியில் இது கடன்பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவிற்காக தேவையான அனுமதிகள் பெறப்பட்டன. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக மாத்திரம் செயற்திட்டத்தின் நிதிகளை செயற்திட்டம் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | தரவு கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்விற்காக (M&E) இணையதள அடிப்படை இருள் நீக்க முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டு 2020 சனவரி 16 இல் தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டமானது நிறுவன இயலளவை வலுப்படுத்தும் கூறின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமையை பராமரிப்பதற்கு தரமுயர்த்தப்பட்ட இருள் நீக்க முறைமை முகாமைத்துவத்தை வாடகைக்கு பெற்றிருந்ததுடன் ரூபா 8 மில்லியன் செலவழித்திருந்தது. | மேற்குறித்த M&E முறைமையை விருத்தி செய்வதற்கு ஆலோசனை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பங்குடமையாளர்களுடன் பல கலந்துரையாடல்கள் (DNCWS/NWSDB/PHDT etc) நடாத்தப்பட்டதுடன் இணைய தளத்தின் அபிவிருத்தி கட்டத்தில் அவர்களுடைய கருத்துரைகள் கருத்திற்கொள்ளப்பட்டது. கையளிக்கப்பட்ட பின்னர், DNCWS இந்த இணைய தளத்திற்காக மேலதிக வசதிகளை வேண்டியிருந்தது. அவர்கள் தரவு அடிப்படையை வைத்திருப்பதற்கு மேலதிக வசதிகள் வேண்டியிருந்தனர் அதேநேரம் M&E முறைமை செயற்படுகின்றது. ஆகவே, செயற்திட்டமானது இணைய தள அடிப்படை M&E முறைமைக்கு மேலதிக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தனிப்பட்ட ஆலோசனையாளர் சேவையை பெற்றோம். | முறைமையின் வேண்டுகைகள் ஆரம்ப கட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் நடவடிக்கைகள் அபிவிருத்தி காலத்தின் போது நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும். வினைத்திறனின்மையால் ஏதாவது நட்டங்கள் ஏற்படுமாயின் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | உடுபத்தன கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கான ஒப்பந்தம் நீதிமன்ற தீர்ப்புகளில் நிர்மாண வேலைகளை தற்காலிகமாக நிறுத்திவைத்தமையால் 2017 நவம்பர் 27 இல் பரஸ்பரம் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 38.25 மில்லியன் விலை வேறுபாடு உள்ளடங்கலாக ரூபா 104.41 மில்லியன் கிரயத்தில் புதிய ஒப்பந்தகாரருக்கு திரும்பவும் வழங்கப்பட்டது. பௌதீக முன்னேற்றம் 52 சதவீதமாக இருந்த போது ஒப்பந்தம் நிறுத்திய பின்னர் புதிய ஒப்பந்தம் 2022 யூலை 18 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டு 2021 நவம்பர் 15 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், நீர்த்தேக்க மேற்பரப்பின் நிர்மாணம் நின்றதற்காக பொது மக்களிடமிருந்து தொடர்ச்சியான | உடுபத்தன ஒப்பந்தம் நீர் வளம் இன்மையால் பரஸ்பரம் நீக்கப்பட்டது. நீர் வளப் பிரச்சனை நீதி மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. நீதி மன்ற தீர்ப்பின் பிரகாரம் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. | சாத்தியவளக் கற்கையை மேற்கொள்ளாமல் வேலைகள் தொடங்கப்பட்டதிலிருந்து இந்த செயற்திட்டம் தோற்றதிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்ப்பு காரணமாக புதிய ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 2023 யூலை 24 வரை நீடிப்புகள் வழங்கிய பின்னர் 2023 ஏப்ரல் இறுதியளவில் 80 சதவீத முன்னேற்றம் இருந்த போதும் புதிய ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டம் பொதுமக்கள் எதிர்ப்பை இனங்காண்பதற்கு சாத்தியவளக் கற்கை செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஓ) | WASSIP செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 31 ஆக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஐ.அ.டொவர் 13 மில்லியனிற்கு சமமான ரூபா 3,462 மில்லியன் கடன் திருப்பிச் செலுத்தல்கள் 2020 இலிருந்து பொது திறைசேரியால் செய்யப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகளின் தாமதம் மற்றும் நலிவான செயலாற்றல் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்களை அடையாமல் கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டது. | நாட்டிலுள்ள பாதிப்பு மாற்றங்கள் மற்றும் உலக கோவிட் 19 நோய் தொற்று மற்றும் நாட்டின் பொருளாதார சிக்கல் என்பவற்றால் கால நீடிப்புகள் வழங்கப்பட்டது. கடன் உடன்படிக்கை அடிப்படையில் கடன் திருப்பி செலுத்தல்கள் செய்யப்பட்டதுடன் செயற்திட்ட காலப்பகுதி நீடிப்புகள் எதுவும் தொடர்புபடவில்லை. ஆனால், மூல செயற்திட்டம் மற்றும் மேலதிக நிதியளிப்பு என்பவற்றிற்கான செயற்திட்டம் நீடிக்கப்பட்டது. | கடன் திருப்பிச் செலுத்தல்களிற்காக நீடிப்பை பெறுவதற்கு கொடையாளருடன் கலந்துரையாடல் செய்யப்பட வேண்டும். இதன்படி கடன் காலப்பகுதி நீடிப்பதற்கு நீடிப்புகள் வழங்கப்பட்டது. திட்டமிடப்பட்டவாறு செயற்திட்ட பூர்த்தியாக்கலை உறுதி செய்யப்பட வேண்டும். |

**3.3 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்**

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மொனறாகலை சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்காக ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 19 இலில் பூர்த்தியாக்க திட்டமிடப்பட்டு ரூபா 67 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக ரூபா 9.4 மில்லியன் செலவழித்த பின்னர் 45 சதவீத முன்னேற்றத்தில் ஒப்பந்த உடன்படிபக்கை நீக்கப்பட்டது. மேலும், மிகுதி வேலைகளிற்காக கோரப்பட்ட கேள்வி இன்னமும் மதிப்பாய்வு கட்டத்தில் உள்ளது. ஒப்பந்த நடவடிக்கைகள் தொடங்குகையில் வேலிகள் அமைக்கப்படாமையால் நிர்மாணங்களிற்கு இடையூறாக காணிகளிற்குள் உள்ளூராட்சி அதிகாரசபையால் குப்பைகளை கொட்டப்பட்டிருந்தது. | பிரதேச சபையால் தொடர்ச்சியாக குப்பைகளை கொண்டுவதால் ஒப்பந்தகாரர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்காக காணியை தயார்படுத்துவதற்கு குப்பைகளை அகற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. குப்பைகளை கொண்டும் பிரச்சனைகள் முதலாவது ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னரே ஏற்பட்டிருந்தது. | ஒப்பந்தம் பூர்த்தியாக்கலில் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மொனறாகலை மாவட்டத்தில் விசேட தேவைகளுடைய நபர்களிற்காக திட்டமிடப்பட்ட சுகாதார வசதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஒக்தோபர் 30 ஆன பூர்த்தியாக்கல் திகதியுடன் ரூபா 18.37 மில்லியன் கிரயத்தில் 2021 ஏப்ரல் 30 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 ஆகஸ்ட் 31 வரை ஒரு தடவை கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்த பொதிலும்திட்டமிடப்பட்ட 35 வசதிகளில் ரூபா 10.8 மில்லியன் பெறுமதியான 14 வசதிகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | விசேட தேவையுடையவரிற்கு தேவையான சுகாதார வசதிகள் அமைவிட மாற்றத்தின் பின்னர் நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டது. ஆரம்ப இலக்கு 84 ஆக உள்ளது. தற்போது வரை 48 விசேட தேவை சுகாதார வசதிகள் வழங்கப்பட்டன. இயலாதோர் சுகாதார நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டன. | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் தேவைகளை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரத்துக்கலவில் சித்த வைத்திய மக்களிற்காக திட்டமிடப்பட்ட 92 மலசல கூடங்களின் நிர்மாணம் 2021 ஆகஸ்ட் 12 ஆன பூர்த்தியாக்கல் திகதியுடன் ரூபா 14.8 மில்லியன் கிரயத்தில் 2021 பெப்ரவரி 12 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் 2022 ஆகஸ்ட் 31 வரை ஒரு தடவை கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்த பொதிலும் 2022 நவம்பர் 25 ஆன பௌதீக மெய்மையாய்வு திகதியில் எவ்வித நலன்களையும் பூர்த்தியாக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் தேவைகளை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மஹாகம் புனரமைப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் தொடர்பிலான செயற்திட்டத்தின் நிர்மாணம் 2021 திசெம்பர் 17 ஆந் திகதி பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியுடன் ரூபா 53.2 மில்லியன் கிரயத்தில் 2020 திசெம்பர் 18 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக 2023 யூலை 09 வரை இரண்டு தடவைகள் கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்த பொதிலும் 2022 நவம்பர் 25 ஆன பௌதீக மெய்மையாய்வு திகதியில் 65 சதவீத முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. | தற்போது பூர்த்தியாக்கல் கட்டத்தில் உள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்த வேலைகளை புறீர்த்தியாக்கவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பீலிகந்துர கிராமிய நீர் வழங்கல் திட்டம் தொடர்பான் செயற்திட்ட நிர்மாணம் 2018 நவம்பர் 27 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டயலிடப்பட்டு ரூபா 127.03 கிரயத்தில் 2017 நவம்பர் 27 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தமானது நான்கு அண்டுகள் கடந்து 08 நீடிப்புகளின் பின்னரே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு என்பன செயற்திட்ட பூர்த்தியாக்கலின் தாமதத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும், அளவீட்டு பட்டியலின் பிரகாரம் அந்த விடயங்கள் வழங்கப்பட்டிருக்காத பொதிலும் | பகுதியளவில் நீர் வழங்கல் திட்டம் செயல்படுகின்றது. 600 வீட்டு இணைப்புகளில், 360 வீடுகள் நீர் பெறுவது செயற்பாட்டிலுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்த வேலைகளை புறீர்த்தியாக்கவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செயற்திட்டமானது DI குழாய்கள் மற்றும் GI குழாய்கள் மற்றும் பொருத்திகள் என்பன திட்டமிடப்பட்டிருந்தது. அளவீட்டு பட்டியலின் பிரகாரம் வேண்டப்பட்ட தரத்துடன் அந்த குழாய்கள் மற்றும் பொருத்திகளின் வழங்கலை மெய்மையாய்வு செய்வதற்கு சான்றுகள் இருக்கவில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்டமானது சேவை ஒப்பந்தத்தின் கீழ் 108 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்தது. அதில், அதில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத நில அளவையாளர், படவரைஞர் மற்றும் காணி உத்தியோகத்தர் போன்ற 07 பதவிகளிற்காக 05 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நில அளவையாளர், படவரைஞர் போன்ற சில பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்த பட்டியலில் இருக்கவில்லை. ஆனால், செயற்திட்ட நடவடிக்கைகளின் வேண்டுகைகளிற்காக குறுகிய கால சேவை ஒப்பந்தங்கள் மூலம் செயற்திட்டமானது சேவையை பெற்றிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வெண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் நொக்கில் எப்பொது முழு நேர அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும், செயற்திட்ட பணிப்பாளர் 2020 நவம்பர் 05 இலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளராக (மேல் மத்தி) பதவியுயர்த்தப்பட்டிருந்தார். | பதிலளிக்கப்படவில்லை. | முழுநேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |